සියලු ම හිමිකම් ඇවිරිණි/ முழுப்பதிப்புரிமையுடையது All Rights Reserved] 

# சப்பிரகமுவ மாகாணக் கல்வித் திணைக்களம்

## முதலாம் தவணைப் பரீட்சை - 2016

**கத்தோலிக்க திருமறை - 10** | **3 மணித்தியாலங்கள்**

**சுட்டெண்:.............................................**

## பகுதி - I

1. **மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக**

1. கிறிஸ்தவர்களின் அதிமேன்மையான புனித நூல்
   அ. புதிய ஏற்பாடு ஆ. பழைய ஏற்பாடு இ. திருவிவிலியம் ஈ மத்தேயு

2. புதிய ஏற்பாட்டில் முதல் முதலாக எழுதப்பட்ட நற்செய்தி நூல் எது?
   அ. மத்தேயு ஆ மாற்கு இ. லூக்கா ஈ. யோவான்

3. திருவிவிலியத்தின் பிரதான ஆசிரியர் யார்?
   அ. ஆபிரகாம் ஆ. மோசே இ. மனிதன் ஈ இறைவன்

4. "தெயோபில்" என்ற சொல்லின் பெயர் என்ன?
   அ. ஆண்டவரின் நண்பன் ஆ. மனிதனின் நண்பன். இ. இரக்கம் உள்ளவர் ஈ. அன்பு உள்ளவர்

5. திருத்தூதர் பணி நூலானது எந்த இடத்தில் எழுதப்பட்டது?
   அ. எகிப்து ஆ. அகாயா இ. ரோம் ஈ. கானான்

6. பழைய ஏற்பாட்டின் கடைசி நூல் எது?
   அ. தானியேல் ஆ. மக்கபேயர் இ. யோபு ஈ. திருவெளிப்பாடு

7. எஸ்தர் ரூத் என்பவை -------------------- வகை நூல்களுக்குள் அடங்கும். இடைவெளிக்கு பொருத்தமான சொல்
   அ. சட்ட நூல்கள் ஆ. வரலாற்று நூல்கள் இ. ஞான நூல்கள் ஈ..இறைவாக்கினர் நூல்கள்

8. திருவிவிலியம் எழுதப்பட்ட காலப்பகுதி எது?
   அ. கி.மு 950- கி.பி. 100 ஆ. கி.பி. 100 - கி.மு 950 இ. கி.மு 980- கி.பி. 95. ஈ. கி.மு 900- கி.பி 950

9. திருவெளிப்பாட்டு நூலில் காணப்படும் "7" இலக்கக் குறியீடு வெளிப்படுத்தும் கருத்து?
   அ. நிறைவு ஆ. முழு நிறைவு இ. தோல்வி ஈ. பிரபஞ்சம்

10. திருச்சபையின் பிறப்பு விழா எது?
    அ. உயிர்ப்பு விழா ஆ. நத்தார் விழா இ. புதுவருட விழா ஈ. பெந்துக்கோஸ்து விழா

11. தூய யாக்கோபுவின் மறுபெயர் என்ன?
    அ. தூய சந்தியாகு ஆ. தூய அகிரிப்பா இ. தூய மத்தியாஸ் ஈ. தூய அருளாளர்

12. பழைய ஏற்பாட்டில் ஞானம் என்பதற்கு பயன்படுத்தப்பட்ட எபிரேயச் சொல்
    அ. முழுமை ஆ. அன்பு இ. கெக்மா ஈ. சினகொக்

13. 12 திருத்தூதர்கள் மத்தியில் முதல் மறைசாட்சியானவர்.
    அ. பேதுரு ஆ. யோவான் இ. பவுல் ஈ. யாக்கோபு

14 இயேசுவின் இறந்த உடலை சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம் செய்ய முன்வந்தவர்
    அ. அரிமத்திய ஊர் யோசேப்பு ஆ. முதல்சீடரான சீமோன் பேதுரு
    இ. சீரேனே ஊர் சீமோன் ஈ. ஆண்டவரின் நண்பன்

15. திருத்தூதர் பணி நூலை எழுதியவர் யார்?
    அ. புனித மத்தேயு ஆ. புனித யோவான் இ. புனித பவுல் ஈ புனித லூக்கா

16. பெந்துக்கோஸ்து நாளில் பேதுருவின் அருளுரையின் பின்பு மனம் வருந்தித் திருமுழுக்குப் பெற்றோர்.
    அ. 3000பேர் ஆ. 4000பேர் இ. 300பேர் ஈ. 100 பேர்

17 இயேசு தம் தோள்மீது சுமத்தப்பட்ட சிலுவையை சுமந்து கொண்டு செல்ல உதவியவர்
    அ. சீமோன் பேதுரு ஆ. சீரேன் ஊர் சீமோன் இ. அரிமத்தியா ஊர் யோசேப்பு ஈ. யூதாஸ்கரியோத்

18. இயேசு இறுதியாக சிலுவையில் கூறிய வார்த்தை
    அ. "தந்தையே இவர்களை மன்னியும்" ஆ. "தந்தையே உம்கையில் என் உயிரை ஒப்படைக்கின்றேன்"
    இ. "இன்று நீ என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பாய்" ஈ. "தாகமாக இருக்கிறேன்"

19. ஞான இலக்கியத்தினுள் உள்ளடங்காத நூல்
அ. யோபு ஆ. திருவெளிப்பாடு இ. சபை உரையாளர் ஈ. சீராக்கின் ஞானம்

20. திருத்தூதர் பணி நூலானது எக்காலப்பகுதியில் எழுதப்பட்டதாக கருதப்படுகிறது.
அ. கி.பி. 80- 90 ஆ. கி.பி.70- 80 இ. 85- 90 ஈ. கி.பி. 85- 95

21. இயேசு செய்தவை வேறு பலவும் உண்டு. அவற்றை ஒவ்வொன்றாக எழுதினால் எழுதப்படும் நூல்களை உலகமே கொள்ளாது என குறிப்பிடப்படும் நூல்
அ. மத்தேயு 14:1-2 ஆ. மாற்கு 21:25 இ. யோவான் 21:25 ஈ. லூக்கா 15:1-2

22. 'மானிட மகன் யாரென நீங்கள் சொல்லுகின்றீர்கள்' என இயேசு சீடர்களிடம் கேட்டதிற்கு பேதுரு கூறிய பதில்
அ. "நீர் மெசியா வாழும் கடவுளின் மகன்" ஆ. "என் ஆண்டவரே என் தேவனே
இ. "கடவுளின் மகன்" " ஈ. "மானிட மகன்"

23. "பேதுரு" என்பதன் பொருள்.
அ. மோட்சம் ஆ. பாறை இ . அன்பு ஈ. விசுவாசம்

24. இறைவன் மோசேக்குத் தன்னை எவ்வாறு அடையாளப்படுத்திக் காண்பித்தார்?
அ. எரியும் முட்செடியில் ஆ. மேகத்தில் தோன்றிய வானவில் இ. புயல் காற்றில் ஈ. நில நடுக்கத்தில்

25. ஆண்டவர்………………சாலமோனுக்கு கனவில் தோன்றினார். இடைவெளிக்கு பொருத்தமான சொல்
அ. மலை உச்சி ஆ. ஆலயவாயில் இ. பலிப்பீடத்தில் ஈ. கிபயோன்ல்

26..திருவிவிலியத்தில் புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ள நூல்கள்
அ. நாற்பத்தாறு ஆ. முப்பத்தொன்பது இ. இருபது ஈ. இருபத்தேழு

27..பின்வருவனவற்றுள் தூய பவுலுடன் தொடர்புடைய விடயங்கள்
A. சிறையில் அடைக்கப்பட்டார். B. திருச்சபையின் தலைவர்.
C. திருமுகங்களை எழுதினார். D. பெஞ்சமின் கோத்திரத்தை சேர்ந்தவர்.
அ. A , C , D ஆ. A , B , C இ . A , C , D ஈ. B , C , D

28. கிறிஸ்தவர்களை கைது செய்வதற்காக தலைமைக்குருவிடம் அனுமதிக் கடிதங்களை கேட்டு வாங்கியவர்.
அ. யூதாஸ் ஆ. பேதுரு இ. பவுல் ஈ. ஸ்தேவான்

29. சாலமோன் அரசன் கடவுளிடம் கேட்ட வரம்
அ. அன்பு ஆ. அரசாட்சி இ. புகழ் ஈ. ஞாகம்

30. உயிர்த்த இயேசு தோமாவுக்கு தரிசனமாகிய போது தோமா கூறிய சாட்சியம்
அ. "உண்மையான இறைவன் நீரே" ஆ. "ஆண்டவரே உம்மை அன்பு செய்கிறேன்"
இ "என் ஆண்டவரே என் தேவனே" ஈ. "நீரே உண்மையான மெசியா"

31. இயேசுவின் வாழ்கை வரலாற்றை கூறும் நூல்களை எவ்வாறு அழைப்பர்?
அ. ஞான நூல்கள் ஆ. ஏசாயா நூல் இ. தொடக்க நூல் ஈ. நற்செய்தி நூல்கள்

32. இயேசுவின் உயிர்ப்பிற்கு முதல் சாட்சி…………………… ஆவார்
அ. மகதலாமரியா ஆ. யோவான் இ. அன்னை மரியாள் ஈ. பேதுரு

33. பேரரசன் நீரோவின் கலாபனையில் சிரம் வெட்டி கொலை செய்யப்பட்டவர்.
அ. திருமுழுக்கு யோவான் ஆ. புனித பவுல் இ. பனித யாக்கோபு ஈ. தூய முடியப்பர்

34."இயேசுவே ஆட்சியுரிமையோடு வரும் போது என்னையும் நினைவிற் கொள்ளும்"……….என்ற வார்த்தையை கூறியவர்?
அ. சிலுவையில் தொங்கிய கள்வர்களில் ஒருவர், ஆ. தீய ஆவி பிடித்திருந்தவர்,
இ. பார்வையற்றிருந்த பார்த்திமேயு, ஈ. தூய பேதுரு

35. சாலமோன் அரசன் ஆயிரம் எரிபலிகளை செலுத்திய இடம்.
அ. சீனாய் மலை ஆ. எருசலேம் ஆலயம் இ. கிபயோன்மலையுச்சி ஈ. யோர்தான் கரை

36. தூய ஆவியின் கொடைகளுள் ஒன்று
அ. அன்பு ஆ. மகிழ்ச்சி இ. அமைதி ஈ. ஞானம்

37. பழைய ஏற்பாட்டில் இறுதி நூல் எது?
அ. 2 மக்கபேயர் ஆ. தானியல் இ. மலாக்கி ஈ. மீக்கா

38. 2016 ஆண்டு 1ம் பிரான்சிஸ் அவர்களால் என்ன ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது?
அ. அன்பின் ஆண்டு ஆ. இரக்கத்தின் ஆண்டு இ. மன்னிப்பின் ஆண்டு ஈ. இறைவார்த்தை ஆண்டு.

39. பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டு இலக்கிய நூல் எது?
அ. திருவெளிப்பாடு ஆ. சீராக்கின் ஞானம் இ. மீக்கா ஈ. தானியேல்

40."முழு மனத்தோடு ஆண்டவரை நம்பு உன் சொந்த அறிவாற்றலைச் சார்ந்து நில்லாதே……………என கூறும் விவிலிய பகுதி அடங்கிய நூல்
அ. நீதிமொழிகள் 3:5-6 ஆ. சீராக் 3:5-6 இ. திருப்பாடல் 10:1-2 ஈ. சாலமோனின் ஞானம் 5:3-6

பகுதி -2 தரம் 10

**முதலாம் வினாவிற்கும் மேலும் நான்கு வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

1. **அ.** பெந்த கோஸ்து நாளில் நடந்த விசேட அம்சங்கள் இரண்டு தருக.
**ஆ.** பந்தி பரிமாற திருத் தொண்டர்களை நியமித்த போது அவர்களிடம் இருந்து எதிர்பார்த்த பண்புகள் இரண்டு எழுதுக.
**இ.** இயேசு சிலுவையில் கூறிய வசனங்கள் மூன்று எழுதுக.
**ஈ.** மூன்றாம் முறையும் இயேசுவை தெரியாது என மறுதலித்த பேதுருவை இயேசு திரும்பிப் பார்த்த போது அவரில் ஏற்பட்ட மாற்றம் என்ன?
**உ.** எபிரேய ஞானத்தில் பிரிவுகள் 2 தருக?
**ஊ.** சாலமோன் அரசன் இறைவனிடம் கேட்ட வரம் என்ன?
**எ.** திருவிவிலியத்தில் உள்ள “வெளிப்படுத்தல்” நூல்களை குறிப்பிடுக.
**ஏ.** பவுல் தன் கைபட எழுதிய திருமுகங்கள் மூன்று தருக?
**ஐ.** தூய லூக்காவின் திறமைகள் இரண்டு தருக?
**ஒ.** பபிலோனியாவுக்கு நாடு கடத்தப்பட்ட பின் திரும்பவும் தம் சொந்த நாடு வந்து புனரமைப்பு பணிகளில் ஈடுபட்டது தொடர்பாக கூறப்படும் நூல்கள் எவை?

**2.** அ. ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்கள் மூன்று எழுதுக.
ஆ. ஞான இலக்கியத்தில் பிரதான குறிக்கோள் என்ன?
இ. பரீட்சை தொடங்குவதற்கு முன் இறை ஞானத்தை வேண்டி செபிக்கக் கூடிய செபம் ஒன்று எழுதுக?

3. அ. தொடக்க திருச்சபையில் காணப்பட்ட பண்புகள் மூன்று எழுதுக.
ஆ. திருச்சபையின் முதல் வேதசாட்சியையும் அவர் மரணமான முறையையும் குறிப்பிடுக.
இ. தொடக்க திருச்சபையின் பண்புகளை எவ்வாறு எம் பங்கு திருச்சபையில் வளர்க்க முடியும்.

4. அ. தூய பவுலின் திருமுகங்களை வகைப் படுத்துக.
ஆ. தூய பவுல் திருமுகங்களை எழுதியதன் நோக்கம் இரண்டு எழுதுக.
இ. கிறிஸ்துவுக்காக பணிசெய்து மரணித்த பவுலின் வாழ்வில் இருந்து நீர் கற்றுக் கொள்ளும் படிப்பினைகள் ஐந்து எழுதுக.

5. அ. இயேசு கைது செய்யப்பட்ட பின்னர் அவரை விசாரித்த நபர்கள் 2 குறிப்பிடுக.
ஆ. இயேசு சிலுவையில் கூறிய வார்த்தைகள் மூன்று எழுதுக?
இ. இயேசுவுக்கு சாட்சி பகிரும் போது உமது வாழ்வில் நீர் எதிர் கொண்ட சவால்கள் 5 எழுதுக?

6. அ. பழைய ஏற்பாட்டின் பிரிவுகளை வகைப்படுத்துக.
ஆ. திருச்சபை பாரம்பரியம் என்றால் என்ன?
இ. இறை வார்த்தை உமது வாழ்வுக்கு எவ்வாறு வழிகாட்டுகின்றது?

7. அ. கீழ் வரும் தலைப்புக்களில் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.
ஆ. பெந்நகோஸ்தே நிகழ்வு, ஆ, திருத்தூதர் பணி நூல்
இ, தூய பவுல் ஈ. திருமுகங்கள்.